**National Book Development Council of Singapore**
Storytelling ● Reading ● Writing ● Publishing

NBDCS
The Book Council

## தமிழ் திருத்தப் பணிப் பயிலரங்கு (Tamil Editing Workshop)

சிங்கப்பூர்த் தேசிய புத்தக மேம்பாட்டுக் கழகம் (NBDCS), சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து மேற்கண்ட பயிலரங்கை நடத்தவிருக்கிறது.

நாள் : சனி & ஞாயிறு, **15 & 16 மே, 2010**
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
இடம்: சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்க இல்லம்,
394 ரேஸ் கோர்ஸ் சாலை, சிங்கப்பூர்

பனுவல்கள், சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் ஆகியவற்றைப் பதிப்புக்கு ஏற்றவாறு திருத்தியமைப்பது தமிழ்ப் பதிப்புலகில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடையாமல் உள்ளது. நாம் மற்ற மொழிகளின் பதிப்புகளை நோக்கும்போது, குறிப்பாக ஆங்கில மொழியினை எடுத்துக் கொண்டால், பதிப்புத் துறையில் நாம் எட்ட வேண்டிய தொலைவை உணர முடியும். நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர்கள்கூட பதிப்புக்கு வேண்டிய முறையில் ஏட்டை உருவாக்கும் பதிப்பாசிரியர் (editor) சரிபார்த்துச் செப்பமிட்ட பின்னரே,தமது படைப்பைப் பதிப்பிக்கின்றனர்.

தமிழ்ப் பதிப்புத் துறைக்குத் தேவைப்படும் இந்த இன்றியமையாப் பயிற்சியை வழங்கத் தேசியப் புத்தக மேம்பாட்டுக் கழகம் ஏனைய இரண்டு அமைப்புகளோடு இணைந்து முன்னோடித் திட்டமாக இந்தப் பயிலரங்கை ஏற்பாடு செய்துள்ளது. இதுவே சிங்கப்பூரில் இத்தகைய பயிலரங்கிற்குத் தமிழில் மேற்கொள்ளப்படும் முதல் முயற்சி எனலாம்.

இந்தப் பயிலரங்கு இரு நாட்கள் நடைபெறும். பயிலரங்கில் விரிவுரை, செய்து காட்டல், தனிப்பட்டமுறைப் பயிற்சி ஆகியன இடம்பெறும். பயிலரங்கின்போது புதினம், புதினம் அல்லாதவை, மொழிபெயர்ப்புப் படைப்புகள் ஆகியவற்றைச் செப்பமிடுவதில் பயிற்சியளிக்கப்படும்.

இந்தத் துறையில் மிகுந்த அனுபமும் ஆற்றலுமிக்கவர்கள் இப்பயிலரங்கை நடத்தவுள்ளனர்.

### திரு பா ராகவன்:

தலைமை பதிப்பாசிரியர், நியூ ஹொரைஸன் மீடியா. பல்வகைத் தமிழ்ப் பதிப்புக்களுக்கு ஆசிரியர் . இவர் கல்கி, குமுதம் போன்ற பிரபல வார இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஏறக்குறைய 25க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவருடைய புகழ் பெற்ற நூல்கள் குமுதம் ரிப்போர்ட்டர் வார இதழில் தொடராக வெளிவந்துள்ளன. தமிழ்த் திரைப் படங்களுக்கும் உரையாடல், திரைக்கதை எழுதியுள்ளார்.

### டாக்டர் சேஷாத்ரி:

நியூ ஹொரைஸன் மீடியாவின் இணை நிறுவுநர், நிர்வாக இயக்குநர். டாக்டர் சேஷாத்ரி குழந்தைகளுக்குப் பல அறிவியல் நூல்கள் எழுதியுள்ளார். ஆங்கிலமொழி நூல்களை மொழி

பெயர்த்து அவற்றைத் தாமே திருத்தியமைக்கும் பணியையும் செய்து தமிழில் வெளியிட்டுள்ளார். டாக்டர் சேஷாத்ரி, அமெரிக்காவின் கார்நெல் (Cornell) பல்கலைக் கழகத்தில் B.Tech எனப்படும் பொறியியல் பட்டம் பெற்றுள்ளார்.

### திரு அருண் செங்குட்டுவன்:

சிங்கப்பூரில் புகழ்மிக்க பத்திரிகையாசிரியர், நிருபர்களுள் ஒருவர். இத்துறையில் 40 ஆண்டுகளுக்கு மேல் அனுபவமுடையவர். ஸ்டிரேட்ஸ் டைம்ஸ், சிங்கப்பூர் ஹெரால்ட், தி நேஷன் (பேங்காக்), உலகத் தரம் வாய்ந்த எக்கானிமிக்ஸ்ட், ஃபைனான்ஷியல் டைம்ஸ் மற்றும் ஃபார் ஈஸ்டர்ன் எக்கானிமிக்ஸ் ரிவியூ ஆகிய இதழ்களில் பணிபுரிந்த சிறப்புக்குரியவர்.

நீங்கள் இப்பயிலரங்கிற்கு உங்களுடைய படைப்புகளைக் கொண்டு வரலாம். பயிலரங்குத் தலைவர்கள் அவற்றை ஆய்வு செய்து காண்பிப்பர்.

இந்தப் பயிலரங்கு சிங்கப்பூர்த் தேசிய புத்தக மேம்பாட்டுக் கழகம், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் ஆகிய அமைப்புகளின் பெரும் நிதியுதவியைக் கொண்டு நடத்தப்படுவதால் பயிலரங்கிற்கான கட்டணம் ஒருவருக்கு $50 மட்டுமே. இத்தொகை பயிலரங்கில் பங்கு பெறுவோருக்கு இரண்டு நாட்களுக்கு வழங்கப்படவிருக்கும் மதிய உணவு, தேநீர் மற்றும் நிர்வாகச் செலவைச் சரிக்கட்ட உதவும்.

பதிப்புக்கு ஏற்றவாறு ஏட்டைத் திருத்தியமைக்கும் இந்த முன்னோடித் தமிழ்ப் பயிலரங்கில் நீங்கள் கலந்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம். பயிலரங்கில் கலந்து கொண்டு, திறன்மிக்க பயிலரங்குத் தலைவர்களின் அனுபவம், புலமை ஆகியவற்றின் பயனை அடையுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மே மாதம் 15 & 16 தேதிகளில் சந்திப்போம்.

பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் பதிலுரைப்பு முறியை நிறைவு செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன்,
திரு ரா. ராமச்சந்திரன்
தலைமை நிர்வாக அதிகாரி
தேசிய புத்தக மேம்பாட்டுக் கழகம்

# Tamil Editing Workshop

15 & 16 May 2010 I 9am-6pm I Tamil Teachers Union HQ

## *Course Administration*

**Registration Fees**

☐ S$50 per person

Fee is nett and is in Singapore dollars. Includes lunch/tea breaks and workshop materials.

**Due to limited space, registration will be on first come first served basis.**

**Ways to register**

1. Register online by visiting www.bookcouncil.sg, or
2. Complete the form below and fax it to **(65) 6742 9466**.

**Cancellation & Substitution**

An invoice will be issued upon receipt of your registration form. Fees paid are non-refundable but transferable.
Requests for cancellation must be made on/before 28 April 2010, after which a cancellation charge of 50% of the full course fee is applicable.

**Payment**

Payment is required before the workshop commences or within 30 days of receipt of invoice, whichever is earlier. Payment to be made in Singapore Dollars, by cash, cheque or bank draft, payable to "**NBDCS**" and mail the payment together with your form to us. Alternatively you may deliver your payment, with your name and contact details attached, immediately after you have faxed/emailed/submitted your online registration.

Upon submission of your registration, you are deemed to have read and understood the registration procedures and accepted the terms contained therein.

**Mailing Address**

National Book Development Council of Singapore,
50 Geylang East Avenue 1, Singapore 389777

**Enquiries**

Email : jade@bookcouncil.sg Tel : (65) 6848 8292

## *Registration*

Mr/Mrs/Ms/Dr ______________________________

Organisation: ______________________________

Designation: ______________________________

Address: ______________________________

Tel: ____________ Mobile: ____________ Fax: ____________

Email Address: ______________________________

☐ I am paying by cash/cheque. Bank:____________ Cheque no.: ____________

☐ I am sponsored by my company / organisation

I will need a/an: ☐ Physical Invoice ☐ e-Invoice (via AGD)

Please provide billing details if different from above

Contact Person: ______________________________

Address: ______________________________

Tel: ____________ Email Address: ____________